இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2023. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 147 இதழ் : 10 திகதி : 18.06.2023 விலை : 50.00

# புனித அந்தோனியார் நற்கருணை, திருப்பலியில் ஆழ்ந்த பக்தியும் ஏழைகள் மட்டில் பரிவிரக்கமும் கொண்டிருந்தார்


## ஊறணி புனித அந்தோனியார் ஆலய 175ஆவது ஆண்டு விழாவில் யாழ்.ஆயர்



ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்தின் 175வது ஆண்டு விழா கடந்த 13.06.2023 அன்று யாழ். ஆயர் தலைமையில் கொண்டாடப்பட்டது. இவ் விழாத்திருப்பலியைத் தலைமையேற்று ஒப்புக்கொடுத்து மறையு ரையாற்றுகையில் ஆயர் குறிப்பிட்டதாவது புனித அந்தோனியார் முதலாவதாக நற்கருணையிலே ஆழமான பக்தி கொண்டிருந்தார். அவர் அடிக்கடி திருப்பலியில் பங்குபற்றி நற்கருணை உட்கொள்வதில் மிக ஆர்வமாக இருந்தார். இரண்டாவதாக திருவிவிலியத்தைப் கற்று வாழ்வதை அடிப்படையாகக்கொண்டு மறையுரை ஆற்றுவதிலும் மறைவல்லுனராகத் திகழ்ந்தார். மூன்றாவதாக ஏழைகளின் நிலையறிந்து அவர்களுக்குத் தம்மாலான உதவிகளைப் புரிந்து வந்தார். புனித அந்தோனியாரைப்போல் அவரின் பக்தர்களாகிய நாமும் வாழவேண்டுமென்பதே இவ் விழா விடுக்கும் அழைப்பாகுமென ஆயர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து "ஊறணியம்" நூல் வெளியீட்டு விழா இடம்பெற்றது. இம் மலரினை யாழ். ஆயர் அவர்கள் வெளி யிட்டு வைத்தார். இவ் விழாவின் போது மண்ணின் மைந்தர்களாகிய அருட்பணியாளர்களும், துறவிகளும் கௌரவிக்கப்பட்டனர். "ஊறணியம்" எனும் நூலினை அருட்தந்தை அன்ரனி பாலா அடிகளார் தொகுத்து வடி வமைத்திருந்தார். இந் நூற்றாண்டு விழாவின் அனைத்துப் பணிகளையும் பங்குத்தந்தை அருட்பணி இ.தேவராஜன் அடிகளார் மிகச் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தாமஸ் அக்குவினாஸ் புனிதராக அறிவிக்கப்பட்டு 700 ஆண்டுகள்



இவ்வாண்டு ஜீலை மாதம் 18ஆம் திகதி இத்தாலியின் Fossanova துறவு மடத்தில் இடம்பெற உள்ள இந்த 700வது ஆண்டுக் கொண்டாட்டத்தில் திருத்தந்தையின் பிரதிநிதியாக, புனிதர் பட்ட நிலைகளுக்குரிய திருப்பீடத் துறை யின் தலைவர் கர்தினால் செமராரோ கலந்துகொள்கிறார்.

இத்தாலியின் Roccasecca என்னுமிடத்தில் 1225ஆம் ஆண்டு பிறந்து தொமினிக்கன் சபைத் துறவியான புனித தாமஸ் அக்குவினாஸ் அவர்கள், ஒரு பெரிய தத்துவஞானி யாகவும், இறையியல் வல்லுநராகவும் அறியப்படுகிறார்.

இத்தாலியின் Fossanova துறவு மடத்தில் 1274ஆம் ஆண்டு மார்ச் 7ஆம் திகதி இறைபதம் சேர்ந்த இவரை, 1323ஆம் ஆண்டு ஜீலை மாதம் 18ஆம் திகதி திருத்தந்தை 22ஆம் யோவான் புனிதராக அறிவித்தார்.

## நீதி என்பது அநீதியாகவும், ஆட்சி என்பது சர்வாதிகாரமாகவும், சட்டம் என்பது கட்டுப்பாடற்ற நிலையை நோக்கியும் சென்றுகொண்டிருப்பதாகக் கர்தினால் கவலை



மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை மதிக்கும் விதமாக இலங்கையின் இடைக்கால அரசு நகராட்சி மற்றும் ஊராட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்துமாறு விண்ணப்பம் ஒன்றை விடுத்துள்ளார் கர்தினால் மல்கம் இரஞ்சித்.

18 வயதிற்கு மேற்பட்டோர் பங்கேற்று நாட்டின் வருங்காலத்தை முடிவுசெய்வதற்கு உதவும் வகையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய கொழும்புப் பேராயர் இரஞ்சித் அவர்கள், நீதி என்பது அநீதியாகவும், ஆட்சி என்பது சர்வாதிகாரமாகவும், சட்டம் என்பது கட்டுப்பாடற்ற நிலையை நோக் கியும் சென்றுகொண்டிருப்பதாக தனது கவலையை வெளியிட்டார்.

## புனித மரியன்னை பேராலயத்தில் அன்பிய எழுச்சிநாள்



யாழ். மறைமாவட்டத்தின் அன்பிய எழுச்சி நாள் சிறப்பு நிகழ்வுகள் பல இடங்களிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இந்நாளை சிறப்பிக்கும் முகமாக கடந்த 04ஆம் திகதி அன்பிய நாள் சிறப்புத் திருப்பலி உதவிப் பங்குத்தந்தை அருட்தந்தை றெனால்ட் அடிகளின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## அறநெறிப் பாடசாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும்படி தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் பணிப்பு



பாடசாலை கல்விக்கு மேலதிகமாக வாரம் முழுவதும் ஓய்வின்றி நடைபெறும் தனியார் கல்வி நிலையங் களின் கற்பித்தல் செயற்பாட்டால் மாணவர்களுக்கும் சமுதாயத்திற்கும் ஏற்படும் சாதக பாதக விளைவுகள் மற்றும் இவற்றை நிவர்த்தி செய்ய எதிர்காலத்தில் மேற் கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சிவபாலசுந்தரன் தலைமையில் கடந்த 09ஆம் திகதி யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடுகள் பற்றியும் அறநெறிப் பாடசாலைகளின் முக்கி யத்துவம் பற்றியும் கலந்துரையாடப்பட்டு சில முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. யூலை மாதம் 01ஆம் திகதி தொடக்கம் தரம் 09க்குட்பட்ட மாணவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் முற்று முழுதாகவும், வெள்ளிக் கிழமைகளில் மாலை நேரத்திலும் வகுப்புக்கள் நிறுத்தப்பட வேண்டுமெனவும், பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்கள் பதிவு செய்யப்பட வேண்டுமெனவும், கல்விச் செயற்பாடுகளில் 15 - 30 நிமிடங்கள் வரை ஆன்மீக விடயங்கள் கற்பிக்கப்பட வேண்டுமெனவும், தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அத்துடன் தனியார் கல்வி நிலையங்கள் மாணவர்களின் ஒழுக்கம், ஆன்மீகம் போன்றவற்றில் கவனம் செலுத் துவதுடன் வகுப்பறைகளில் உரிய இருக்கை வசதி, சுத்தமான குடிநீர், சுகாதாரம் போன்றவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். இக்கூட்டத்தில் யாழ். மறைமாவட்ட மறைக் கல்வி நடு நிலைய இயக்குநர் அருட்தந்தை ஜேம்ஸ் அடிகளும் மற்றும் சர்வமதத் தலைவர்கள், தனியார் கல்வி நிலையங்களின் பிரதிநிதிகள், மாவட்டச்செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## வத்திக்கான் நகரத்திற்கான சட்டங்கள் மாற்றியமைப்பு

நமது நாளின் தேவைகளுக்குப் பதிலளிப்பதற்கும், புதுப்பிக்கப்பட்ட தேவைகளுடன் திருப்பீடத்துறையால் மேற்கொள்ளப்படும் பன்னாட்டுப் பொறுப்புகளிலிருந்து பெறப்பட்ட சூழ்நிலைகளைச் செயல்படுத்துவதற்கும், மே13ஆம் திகதி, புனித பாத்திமா அன்னை திருவிழாவன்று வத்திக்கான் நகரத்திற்கான சட்ட அமைப்பு முறைகளில் திருத்தந்தை பிரான்சிஸ் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளார். புதிதாக மாற்றம் பெறும் சட்டக்கோவை பற்றி இவ்வார ஆசிரியர் தலையங்கத்தில் ஆராய்கின்றோம்.

1929 ஆம் ஆண்டு, ஜூன் 7 ஆம் நாள் திருத்தந்தை 9 ஆம் பயஸினால் கொண்டுவரப்பட்டு 2000மாவது ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் அவர்களால் மாற்றியமைக்கப்பட்ட இச்சட்டங்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தலைமைத்துவத்தின் பத்தாமாண்டு நிறைவில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பத்து ஆண்டுகளில் திருத்தந்தையால் கொண்டுவரப்பட்ட பல சீர்திருத்தங்கள், ஒழுங்குமுறை புதுப்பிப்புகளை நிறைவு செய்யும் இச்சட்டங்கள், அடிப்படைச் சட்டம், மாநில அரசு, சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை ஆகியவற்றில் புதிய சீர்திருத்தங்களுடன் வர இருக்கின்றது.

வத்திக்கான் நகர மாநிலத்திற்கான திருப்பீடப் பேரவையின் சட்ட அமைப்புமுறைச் செயற்பாட்டை உறுதிப்படுத்தும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கர்தினால்களின் தலைவர், பிற கர்தினால்கள் தவிர, ஐந்தாண்டு காலத்திற்குத் திருத்தந்தையால் நியமிக்கப்பட்ட பொதுமக்களாகிய ஆண்களும் பெண்களும் பங்கேற்கின்றனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

கணக்கியல் விதிகளுக்கு இணங்க ஆண்டுதோறும் திருப்பீடப்பேரவையால் விவாதிக்கப்படும் ஆலோசனை செயல்களை நேரடியாகத் திருத்தந்தைக்குச் சமர்ப்பிப்பதன் வழியாக மூன்று ஆண்டு நிதித் திட்டத்தைப் பேராயம் முடிவு செய்கிறது என்றும், வரவு செலவுத் திட்டம், வருமானம் மற்றும் செலவினங்களின் சமநிலையை உறுதிசெய்தல் போன்றவற்றில் தெளிவு, வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையின் கொள்கைகள் ஈர்க்கப்பட வேண்டும் என்றும் அச்சட்டங்கள் வலியுறுத்துகின்றன.

முனஸ் பெட்ரினோ, உடன்படிக்கையின் வழியாக வத்திக்கான் நகர அரசின் இறையாண்மை அதிகாரங்களைப் பயன்படுத்த அழைக்கப்பட்ட வத்திக்கான் சட்டங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன என்றும், திருப்பீடத்தின் முழுமையான மற்றும் தெளிவான சுதந்திரத்தை உறுதி செய்வதற்கும், பன்னாட்டுத் துறையில் அதன் இறையாண்மைக்கு உத்தரவாதம் அளிப்பதற்கும் ஒரு கருவியாக இச்சட்டங்கள் உள்ளன என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்.

மே 13ஆம் திகதி, வத்திக்கான்நகரத்திற்கான பொதுவான விதிகளையும் சட்டங்களையும் கொண்டு வந்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வத்திக்கான் நகர நீதித்துறை, நிர்வாகம், பேரவை மற்றும் பொதுவான விதிகள் பலவற்றிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார். 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் இச்சட்டங்கள் மாநிலத்தில் உள்ள மற்ற அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படை, குறிப்பு, வத்திக்கான் சட்ட அமைப்பின் தனித்தன்மை மற்றும் தன்னாட்சியை உறுதிப்படுத்துகிறது என்றும், இது உரோமைத் தலைமைச் செயலகத்திலிருந்து வேறுபட்டது என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலச் செயல்பாடுகளுக்குத் தேவையான தன்னாட்சியை மாநிலத்திற்குச் சொந்தமான செயல்பாடுகளுக்கு உறுதியளிக்கவும், வத்திக்கான் நகரம் இப்பணிக்குப் பொறுப்பாக அதன் சொந்த நிறுவன அமைப்புடன் பங்களிக்கிறது என்றும், மாநிலத்தின் சரியான இப்பணிக்கு திருத்தந்தை நேரடியாகப் பதிலளிக்கிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் குழுக்கள் மற்றும் பல்வேறு பொறுப்புகளில் உள்ளவர்கள், உண்மையான திருஅவை உணர்வால் உயிரூட்டப்பட்டவர்கள், நிரந்தரமாகத் தங்கள் பணியை நிர்வாகத்திற்காகச் செயல்படுத்துபவர்களுக்கு, இந்த சட்டங்களானது இலாத்தரன் உடன்படிக்கையின் வழியாக வரையறுக்கப்பட்ட பகுதிகளில் தங்கள் அதிகாரத்தை செயல்படுத்துகிறது என்றும் எடுத்துரைத்துள்ளார்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# பொதுநிலையினர் பற்றிய அறிவுப் போட்டி

மேற்படி போட்டியானது தேசிய பொதுநிலையினர் தினத்தையொட்டி (15.10.2023) மறைமாவட்டப் பொதுநிலையினர் கழகத்தால் நடாத்தப்படவிருக்கிறது.மாதிரி வினாக்கள் பாதுகாவலன் பத்திரிகையில் வினா விடையாகத் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்படும். இந்த வினாக்களோடு பாதுகாவலன் பத்திரிகைகளில் வெளிவரும் முக்கிய செய்திகளிலிருந்து சில வினாக்களும் தெரிந்தெடுக்கப்படும் (ஆனிபுரட்டாதி)

பிரிவு ரீதியாக இப் போட்டி நடாத்தப்படும்.

| | | | |
|---|---|---|---|
| கீழ்ப்பிரிவு | : 4, 5, 6ம் ஆண்டு | மத்திய பிரிவு | : 7, 8, 9ம் ஆண்டு |
| மேற்பிரிவு | : 10, 11, 12ம் ஆண்டு | பொதுப்பிரிவு | : மேற்கண்ட பிரிவுகளில் அடங்காதவர்கள் |

வெற்றி பெறும் போட்டியாளர்களுக்குரிய பரிசுகள் (மறைக்கோட்ட ரீதியாகத்) தேசிய பொதுநிலையினர் தின சிறப்பு நிகழ்வில் வழங்கப்படும். பங்குத்தந்தையர்களே இதற்குப் பொறுப்பானவர்கள் பிள்ளைகளை ஊக்குவித்துப் போட்டியில் பங்குபற்ற வைக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம். 30.09.2023 சனி பங்குரீதியாகப் போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

### வினாக்கள்

01.பொதுநிலையினர் என்பவர் யார்?

திருமுழுக்கின் மூலம் இறை அழைப்பைப் பெற்ற திருநிலையினர், துறவறத்தார் தவிர்ந்த இறைமக்களே பொதுநிலையினர் ஆவர்.

02.பொதுநிலையினர் திருத்தூதுப் பணிக்கான அழைப்பை எதனூடாகப் பெறுகின்றனர்?

திருமுழுக்கினூடாக

03. திருத்தூதுப் பணி என்பதைப் பொதுநிலையினராகிய நாம் எவ்வாறு முன்னெடுக்கலாம்?

நாம் வாழுகின்ற உலகியல் அமைப்பில் சான்று பகர்தல் ஊடாக.

04."இறைமக்கள்" என்ற பதம் யார் யாரை உள்ளடக்குகின்றது?

திருநிலையினர், பொதுநிலையினர், துறவறத்தார், அதாவது திருமுழுக்குப் பெற்ற அனைவரும்.

05.பொதுநிலையினரின் சாட்சிய வாழ்வுக்கு மிகச் சிறந்த களங்கள் எவை?

1. குடும்பம்
2. நாம் வாழும் சூழல்
3. தொழில் புரியும் இடம்
4. பங்குத்திருஅவை

06.பொதுநிலையினரின் பணிக்கான அருட்கொடைகளை எமக்கு வழங்குபவர் யார்?

பரிசுத்த ஆவியானவர்.

(தொடரும்...)


திருமண வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்துக்கள்




"இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்" என்ற யேசுவின் பொன் மொழிகளை இதயத்தில் தாங்கி, 1973.06.22 ல் திருமண பந்தத்தில் இணைந்து, இல்லறத்தில் நல்லறம் கண்டு, இனிய நல் மக்கட்பேறு பெற்று, சிறப்புடன் வாழ வைத்து, 2023.06.22ல் பொன்விழாக் காணும் திரு. திருமதி வேதநாயகம் சபாநாயகி தம்பதியினர் நூறாண்டு வாழ்ந்து இன்பத்திலும் துன்பத்திலும் உடல் நலத்திலும் நோயிலும் ஒருவரை ஒருவர் தாங்கி வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

வலைஞர் மடம்
முள்ளிவாய்க்கால்
0771763297
0777322238

அன்புடன் வாழ்த்தும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
மற்றும் உறவினர்கள்

AD- 40

# இரணைமாதா நகர் புனித செபமாலை அன்னை ஆலய நேர்ந்தளிப்பு விழாவும் பங்குமனைத் திறப்பு விழாவும்







ஆலயங்கள் தோறும் கருணையின் வடிவம் மாறாது தாயன்பில் என்றும் எம்மைப் பாதுகாத்து வரும் எம் பாதுகாவலியாம் புனித செப மாலை அன்னையின் ஆலயத் திறப்பு விழாக் கோலம் காண ஏங்கிய எம் மக்களின் எண்ணங்கள் ஈடேற இறைவன் திருவுளம் கொண்டார்.

எமது பூர்வீக மண்ணாம் இரணைதீவில் குடியமர்ந்து எம் மக்களுக்காய்ப் பரிந்து பேசிய எம் அன்னையை விட்டு 1992ம் ஆண்டு எம் மக்கள் இடம் பெயர்ந்து நாச்சிக்குடாப் பகுதியை அண்டிய காட்டுப் பகுதியில் குடியமர்ந்தாலும், தாயை இழந்த சேயா கத் தனித்திருந்த வேளை முன்னாள் பங்குத்தந்தை அமரர் அருட்பணி கருணாரெட்ணம் அடிகளாரோடு எம் மக்களும் இணைய 1992.10.06 அன்று எம் அன்னையின் திருச்சொரூபம் வலைப்பாடு ஊடாக எமது இரணை மாதா நகரில் அமைக்கப்பட்ட புதிய சிறிய ஆலயத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அடர்ந்த காடுகளும், ஒற்றையடிப் பாதைகளும் கொண்ட எம் புதிய கிராமம் முழங்காவில் பங்குடன் ஒன்றிணைய பங்குத்தந்தை அமரர் அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் எம் மக்களைத் தம் மந்தைகளாகப் பொறுப்பேற்றார்.

நீண்ட தூரங்களில் இருந்து திருப்பலிக்கு வரும் எம் மக்களின் இன்னல்கள் உணர்ந்தும், எம் ஆலயம் அமைக்கப்பட்ட நிலப்பகுதியின் சீரற்ற நிலை காரணமாகவும் மக்கள் அனைவர்க்கும் மத்தியாகவும், உயர்ந்த நிலப்பரப்பில் ஆலயம் அமைக்கவும் திட்டமிட்டு இடம் மாற்றம் செய்யப்பட்டு புதிய ஆலயம் அமைக்கப்பட்டது. அரை நிரந்தரக் கட்டடமாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் எம் மக்கள் இறை வழிபாட்டில் ஒன்றுகூடினாலும் நிரந்தரமாக ஓர் ஆலயம் கட்ட வேண்டும் என்ற எம் மக்களின் அபி லாசைகள் நிறைவேற 1996ம் ஆண்டு முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி ஞானரட்ணம் அடிகளாரால் அடிக்கல் நாட்டப்பட்டது.

நாட்டு நிலை, பொருளாதாரச் சிக்கல் காரண-மாக வேலைகள் முன்நகர்த்தப்படாமல் காலம் கடந்த நிலையில் மீளவும் எமது ஆலயத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது. 24.10.2003ம் ஆண்டு பங்குத்தந்தை அருட்பணி X.W.ஜேம்ஸ் அடிகளார் தலைமையில் தற்போ தைய ஓய்வுநிலை ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் அனு மதியுடன் அடிக்கல் நாட்டப்பட்டது.

எமது மக்களின் நிதி உதவியுடனும், சிரமதான உதவிகளுடனும் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் எம் மக்களை ஆன்மீக வழியில் நெறிப்படுத்த இறைவன் அனுப்பி வைத்த முன்னாள் பங்குத்தந்தையர்களான அருட்பணி X.W.ஜேம்ஸ், இயக்குநர் மறைக்கல்வி, இளை யோர் ஆணைக்குழு - யாழ் மறை மாவட்டம். அருட்பணி சாள்ஸ் ஜஸ்ரின் - பங்குத்தந்தை கரவெட்டி, அருட்பணி எ.செ.வி.மரியதாஸ்- பங்குத்தந்தை மாங்குளம். அருட்பணி சி.ம.ப.ஆனந்தகுமார் - புனித அடைக்கல அன்னை ஆலயம் யாழ்ப்பாணம், அருட்பணி சி.அ.அருட்செல்வன் - பங்குத்தந்தை உடு வில், அருட்பணி ம.பத்திநாதர் - பரிபால-கர் பங்குத்தந்தை புனித பற்றிமா அன்னை யாத்திரைத்தலம் பண்டத்தரிப்பு

இவர்களின் வழிநடத்துதல்களோடு ஆலயத்தின் வேலைகள் தொடரலை யாய் நடைபெற்றவேளை, ஸ்தம்பிதமாய் பணி மாற்றங்கள் தொடர ஏக்கத்துடன் எம் மக்கள் நின்ற வேளை இறைவன் திரு அருளால் இவ் ஆலயம் முழுமை பெற - எம்மை வழிநடத்திய புதிய பங்குத்தந்தையான அருட்பணி எமில் ராஜேஸ்வரன் போல் அடிகளார் எம்மைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அன்னையின் பரிந்துரையும், எம் மக்களின் ஒத்துழைப்பும் ஒன்றிணைய எம் ஆலயத்தின் திறப்பு விழா நிகழ்வானது எம் பங்குத்தந்தை அருட்பணி எமில் ராஜேஸ்வரன் போல் அடிகளார் தலைமையில் 10.03.2023 புதன்கிழமை அன்று காலை நேரத்தின் புதுப்பொலிவுடன் இறைவன் துணையோடு ஆரம்பமானது.

திறப்பு விழாவின் ஆரம்ப நிகழ்வாக யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களை வாத்திய இசைமுழங்க மாலை அணிவித்து வரவேற்று, நடன ஆரவாரத்துடன் அழைத்து வந்தபின், பாப்பரசரின் கொடி ஏற்றப்பட்டது. பின் ஆராத்தியுடன் வரவேற்று ஆலயம் அபிஷேகம் செய்யப்பட்டு ஆலயம் திறந்து வைக்கப்பட்டது. அழைக்கப்பட்ட குருக்கள், கன்னியர் மற்றும் விருந்தினர்கள் உட்பட பங்கு மக்கள் அனைவரும் ஆலயத்தினுள் நுழைந்தனர்.

தொடர்ந்து ஆயர் தலைமையில் பல குருக்களும் இணைத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின் இறுதி ஆசீரைத் தொடர்ந்து புதிதாகக் கட்டப்பட்ட பங்குப்பணிமனை ஆயர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு திரை நீக்கம் செய்யப்பட்டது.

திறப்பு விழாவினைத் தொடர்ந்து சிறப்பு நிகழ்வாக ஒழுங்கு செய்யப்பட்ட கௌரவிப்பு நிகழ்வானது ஆலயத்தினுள் ஆரம்பமாகியது. நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மங்கல தீபம் ஏற்றப்பட்டது. தொடர்ந்து வரவேற்புரையினை எம் மண்ணின் மைந்தன் அருட்பணி T.யேசுபாலன் அடிகளார் ஆற்றினார்.

தொடர்ந்து எம் பங்குத்தந்தையின் தலைமையுரை யுடனும், ஆயர் அவர்களின் ஆசியுரையுடனும் கௌரவிப்பு நிகழ்வு தொடர்ந்தது. வருகை தந்த ஆயர், முதன்மை விருந்தினர்கள், பங்குத்தந்தையர்களும் கௌரவிக்கப்பட்டனர். எமது கிராமத்தின் அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகளும், எமது ஆலயக்கட்டிடத்தின் நிறைவிற்காக உழைத்த சகல பணியாளர்களும் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வினைத் தொடர்ந்து ஆலய அபிஷேக விழா சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. இந் நூலிற்கான வெளியீட்டு உரையினை அருட்பணி கீ.கொன்சலஸ் அடிகள் வழங்க இம் மலரின் முதற் பிரதி யினை எம் பங்குத்தந்தை அவர்கள் மலர்க்குழுவின் ஆசிரிய ரோடு இணைந்து ஆயர் அவர்களுக்கு வழங்கி கௌரவித்தார். கௌரவிப்பு நிகழ்வினைத் தொடர்ந்து வருகை தந்த விருந்தினர்கள் அனைவருக்கும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின் இறுதியில் மதிய உணவு அனைவருக்கும் வழங்கப்பட்டது. அன்னையின் பரிந்துரையோடு இறைவன் அருள் ஆசீர் பொழியப்பட்டு ஆனந்தமாக எம் ஆலயத் திறப்பு விழா நிகழ்வானது இனிதாய் நிகழ்ந்தேறியது.

## எம்மவர்க்கெல்லாம் தாய் நீயம்மா

எத்தனை ஏக்கங்கள்
எத்தனை எதிர்பார்ப்புக்கள்
காலங்களும் உருண்டோடின
துன்பங்கள் எம்மை அலைமோதின
அன்னையவள் எம்மைக் கைவிடவில்லை

யுத்தம் எம்மை இவ்விடம்
விட்டுத் துரத்தினாலும்
எம் கிராமம் விட்டுப் போகவில்லை -
அன்னையவள்
ஊர் இழந்தோம்
உறவு இழந்தோம்
பெற்றோரை இழந்தோம்
பிள்ளைகளை இழந்தோம்
சொத்துக்களை இழந்தோம்
சிறையில் அடைக்கப்பட்டோம்
ஒன்றுமில்லாமல் நிர்க்கதியாக மீண்டும்
ஊர் திரும்பும் போது
காடுகளும் பற்றைகளுமாகக்
காட்சியளித்தது - எம் கிராமம்
இல்லிடம் இன்றிப் பதறியபோது - எமக்காகக்
காத்திருந்த அன்னையின் ஆலயம்
ஆறுதல் அடையும் வீடாக இருந்தது
வாய் விட்டு அழுதோம் - அன்னையிடம்
ஆறுதல் கிடைத்தது.
யுத்தத்தின் வடுக்கள் - எம்மோடு
நிழலாக வந்தாலும்
தொழிலை இழந்து
அடிப்படை வசதிகள் இன்றி
ஏதிலிகளாக நின்றாலும்
அன்னையவளுக்கு ஆலயம்
அமைக்க வேண்டும் - என்ற
ஆர்வமும் வெறியும்
எம்மவர்க்குக் குறையவில்லை
அன்னையவள் மீது கொண்ட
அதீத விசுவாசத்துடன்
ஆலயக்கட்டுமானப் பணிகளும் தொடங்கின
சிறுதுளி பெருவெள்ளம் போல்
எம்மவர்களின் உழைப்பினால்
அன்னையின் ஆலயமும்
உயர்ந்தது - அதுபோல்
எம்மவர்களின் தொழில்
முயற்சிகளும் - வெற்றி காண
மனம் நிறைந்த உள்ளத்தோடு
நன்கொடைகள் வழங்க
அன்னையின் ஆலயம் உயர்ந்தது

தாயே! உம் ஆலயம் வானுயர
உம்மைச் சிம்மாசனம் ஏற்றிப் - பார்ப்பதில்
நாம் கொண்ட மகிழ்ச்சி
எண்ணிலடங்காதது
தாயே உம்மைத் தேடி
வந்தவர்களை - நீர்
வெறும் கையோடு அனுப்பியதில்லை
உம்பிள்ளைகளாகிய - எமக்கு
ஆசீரளித்துப் பாதுகாத்து வழிநடத்தும்
அம்மா..

அ.காணிக்கைமலர்

## நிரந்தரம் அவனே தான்


வேசம் போடும் விந்தை உலகினில் பாசம் நிறைந்தவர் மிகச் சில மனிதரே
கோசம் போடுவோர் பாதிக்கப்பட்டவர் கொள்கை என்பது வெற்றுப் பேச்சுக்களே
மோசம் செய்பவனிடத்தும் சிறுபாசம் இருக்கும்
மோதவிட்டு வேடிக்கை பார்ப்பதே பலருக்கு விருப்பம் வாசமான மலர்கள்
வாடித்தான் போகும் வந்த துன்பங்களும் ஓடித்தான் போகும்.

மருத்துவன் தேவை நோயுற்றவர்க்கே இயேசுவின் வார்த்தை
மாற்றங்கள் நடந்தே தீரும் மாறவேண்டியவர் நாங்களே
விரும்புவதை அடைந்திடச் செய்வான் சாத்தான்
வீழ்த்தியே பாவத்தில் அமிழ்ந்திடச் செய்வான்
பருத்த மரங்களெல்லாம் பலமானவை அல்லவே
பாசமென்ற உறவை முறித்திடும் பண ஆசை வருந்துவதை எண்ணிக்
கவலைப்பட வேண்டாம் வரும் நமக்கும் காலம் கடவுள் பதில் தருவார்

நிரந்தரமில்லை மனித வாழ்வினில் எதுவுமே
நினைத்துக் கலங்கினால் நோயும் துன்பமுமே
மரங்கள் எதிர்பார்த்துக் கனிகளைத் தருவதில்லை
மனமுடைந்தவரைத் தேற்றிட மனிதர் முன்வருவதில்லை
கரம்பிடித்தவன் தான் கடைசிவரை வாழ்க்கையில் துணையாளன்
காசும் பணமும் கரைந்திடும் கைகொடுக்காது
வரம்தருபவனே வாழ்வின் சிக்கலைத் தீர்ப்பான்
நிரந்தரம் அவனேதான் மற்றவை நீர்க்குமிழிகளே!

அன்ரனிபீற்றர் அபிராஜன்

# ஊறணி புனித அந்தோனியார் ஆலய 175ஆவது ஆண்டு நிறைவும், ‘ஊறணியம்’ மலர் வெளியீடும்.




இந்து சமுத்திரத்தின் மத்தியில், இலங்கைத்தீவின் எழில் கொஞ்சும் சோலையாம் குடாநாட்டில், வலிகாமம் வடக்கில்(இலங்கையின் வடநேர் எல்லையில்) அமைந்துள்ளது, புகழ்பெற்ற ஊறணி புனித அந்தோனியார் ஆலயம். வரலாற்றுப் புகழ்பெற்ற திருத்தலங்கள் பல கொண்ட வலி-வடக்குப் பிரதேசத்தில் ஊறணி புனித அந்தோனியார் ஆலயம் அமைந்துள்ளமை தனிச்சிறப்பாகும்.

வருடாந்தத் திருவிழாவின் போதும் முதற் செவ்வாய்க்கிழமைகளிலும் கத்தோலிக்க மக்களும் இந்துமத மக்களும் பெருமளவில் ஒன்றுகூடி வந்து இங்கு இறைவனின் அருள் பெற்றுச் செல்கின்றனர். இந்த யாத்திரைத் தலத்தின் 175ஆவது யூபிலியாண்டில் பாதுகாவலர் விழாவை இம்மீள்குடியேற்றப் பங்கின் உள்நாடு மற்றும் புலம்பெயர் தேசங்களில் சிதறி வாழ்கின்ற மற்றும் ஊறணியில் மீளக்குடியேறிய மக்கள் இவ்வருடம் கொண்டாடுகின்றனர். அத்துடன் இப்பெருமை மிக்க வரலாற்று நிகழ்வில் முதன்மை வரலாற்றுச் சான்றாதாரமாக, முதன்முதலாக ‘ஊறணியம்’ என்னும் ஆவணப் பதிவொன்றை இம் மக்கள் வெளியிடுகின்றமை தொடஉபாகவும் இக்கட்டுரை பிரசுரமாகின்றது.





**முதல் சுண்ணக்கல் ஆலயம் - 1848**

சவால்கள் எதிர்ப்புகள் மத்தியிலேயே கிறிஸ்தவ நம்பிக்கை எப்போதும் ஆழமாக்கப்படுகின்றது. இந்த ஆலயத் தோற்றமும் மக்களின் நம்பிக்கை வளர்ச்சியும் சவால்களின் ஊடாகப் பயணித்த வரலாறாகவே காட்சியளிக்கின்றது. போர்த்துக்கேயர் காலத்தில்(குடாநாட்டில்1620களில்) தொடங்கிய வலி-கிழக்கின் அச்சுவேலி, ஒட்டகப்புலக் கத்தோலிக்க குழுமங்களுடன் இணைந்திருந்த, வலி-வடக்கின் அச்சுவேலி, தெல்லிப்பளை, மயிலிட்டி(‘தலையாட்டி வளவு’இல்இருந்தமறைவிடசெபக்கூடத்தில்),ஊறணிக் கத்தோலிக்க குழுமங்களில் இருந்தும், ஒல்லாந்தர் காலத்தில் 1685இல் பிடிபட்டு யாழ். கோட்டையை அகலமாக்கும் வேலைக்காகக் கொண்டுபோகப்பட்டு தவறி நிலத்தில் விழுந்து குற்றுயிராக இருந்தவேளை தப்பியோடி வந்து இறந்தோரைப்பற்றி நல்லூர் சுவாமி சா. ஞானப்பிரகாசர், மயிலிட்டிப் பங்குத்தந்தைக்கு 18.10.1932இல் எழுதிய தனது கடிதத்தில் குறிப்பிடுகின்றார்.

கி.பி. 1687இல் யாழ். குடாநாட்டில் காலடி வைத்த புனித ஜோசவ்வாஸ் அடிகளுடன் தொடங்கிய கோவை ஒரட்டோறியன் சபை இந்தியாவில் தடைசெய்யப்பட்டு அக்குருக்களின் தொகை குறைந்த வேளை வலிகாமத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த மூன்று சில்ரேசியன் சபைக் குருக்களில் அருட்பணி. புளோரன்ரைன் கார்சியாவால் 1848இல் அடிக்கல் நாட்டப்பட்ட, முதல் சுண்ணக்கல் ஆலயம் 25 வருடங்களின் எண்ணற்ற இடையூறுகளின் பின்பு அ.ம.தி.களின் காலத்தில்(1873) நிறைவுற்றதென அறிகின்றோம்.

**முதல் இரண்டு கொட்டில் ஆலயங்கள்**

1620இற்குப் பிற்பாடு ஊறணிக் கிராமத்தின் வடக்கே போர்த்துக்கேயர் காலத்தில் முதலாவது கொட்டில் ஆலயம் கடற்கரையோரமாகக் குச்சிகள், தடிகள், முருகைக்கற்கள் கொண்டு செம்மண்ணால் பூசப்பட்டு. களிமண்ணால் கட்டப்பட்டுப் பனைஓலைகளால் வேயப்பட்டதாகவே இருந்தது. இவ்விதமாக அதைச் சுற்றிவர இருந்த வீடுகளும், ஒல்லாந்தரின் கெடுபிடிகள், மீண்டும் மீண்டும் காலங்காலமாகச் சந்தித்த ஆழிப்பேரலைகள், வெள்ளப் பெருக்குகள், வாந்திபேதி, சின்னமம்மை போன்ற அடிக்கடி வந்துபோன (விசா தேவையில்லாத நிலையில் இந்தியாவில் இருந்து காவிக் கொண்டுவரப்பட்ட) கொள்ளை நோய்கள் காரணமாக அழிக்கப்பட்டதன் எச்சங்கள் கடலுக்குள் போய்விட்டபடியே முன்னோரின் முன்னோர்வழிப் பாரம்பரியமாகவும் இன்றும்கூடக் கடலுக்குள் எம்கண்களால் காணக்கூடியதாகவும் உள்ளன. இத்துடைத்தழித்தலில் இடம் பெயராத மற்றும் இடம்பெயர்ந்தோரில் திரும்பிவந்த, சொற்பப்பேர் சற்று உள்ளே சென்று இரண்டாவது கொட்டில் கோவி லை 1750இற்குப் பிற்பாடு குருசடி என்னும் இடத்தில் அமைத்தனர். இந்த இரண்டாவது கொட்டில் கோவில் பற்றிப் பேரசிரியர் S.V.B. மங்களராஜா, இளவாலை புனித அன்னாள் ஆலய 175ஆவது ஆண்டு மலருக்கு எ(பக். 69-70) எழுதிய தனது கட்டுரையில் வலிகாமத்தில் 1844இல் இருந்த 19 கொட்டில் ஆலயங்களில் ஒன்றாகக் குறிப்பிடுகின்றார். புனித அந்தோனியார் ஆலயமாக இவரால் குறிப்பிடப்பட்ட இவ்வாலயமே, மேற்சொன்ன முதல் சுண்ணக்கல் ஆலயம் திறக்கப்படும்வரை(இவ்வாண்டு 150ஆம் ஆண்டு) வழிபாட்டிடமாக இருந்தது.

**இரண்டாவது ஆலயம்**

இடவசதியின்மை மற்றும் பழமை காரணமாக இச்சுண்ணச் சாந்து முருகைக்கல் ஆலயம் 1982இல் இடிக்கப்பட்டு பங்குத் தந்தை தி.இ. தேவராஜன் அடிகளின் நெறிப்படுத்தலில், புதியதோர் ஆலயம் கட்ட அத்திவாரம் வெட்டுவது முதல் கூரை போடுவது வரை, சிறியோர் முதல் பெரியோர் வரை ஒத்துழைத்து வியர்வை, இரத்தம் சிந்தி உழைத்தனர். சீமெந்தினால் ஆன எட்டு வளைவுகளை அமைப்பதில் பங்குத்தந்தையும் மேலே ஏறிச் சீமெந்து போட்டு மக்களோடு மக்களாக நின்றுழைத்தார். 1984இல் திறக்கப்பட்டது. 07.08.1984இல் எம்மண்ணின் முதல் அருட்பணியாளர் R.C.X. நேசராஜா தனது முதல் திருப்பலியை நிறைவேற்றினார். 15-06-1990இல் மாபெரும் இடம்பெயர்வு உறவுகளைச் சிதைத்தது.

**தற்காலிக, புதிய ஆலயங்கள்.**

பின்பு 2016 நவம்பர் 4ஆம் திகதி 12.00 மணியளவில் 26 வருடங்கள் 05 மாதங்கள் 18 நாட்களின் பின்பு இடம்பெயர்ந்திருந்த ஊறணி மக்கள் மகிழ்ச்சியுடன் திரும்பி வந்த போது(05.04.2012வரை இருந்த) ஆலயம் இருக்கவில்லை. இடிபாடுகள் மிஞ்சியிருந்தன. கண்ணீரோடு துப்பரவு செய்து அகற்றிய வேளை ஆலய அத்திவாரம் மட்டுமே எஞ்சியிருந்தது. 1990இல் இருந்து இன்று வரையும் இராணுவத்தினரே அருகில் ஆலயக்காணியைச் சுற்றி முகாமிட்டிருந்தனர். ஆலயக் காணியும் பெரும் பகுதிக் கிராம நிலங்களும் விடுபட்டாலும் ஆலயத்திற்கு அண்மையாகக் கிராமத்தவரின் வீடுகளைக் கையகப்படுத்தி இராணுவத்தினர் இன்றும் இருக்கின்றனர். அத்திவாரத்திற்கு முன்பாகத் தற்காலிக ஆலயமொன்று 2017இல் அமைக்கப்பட்டது.

அண்மைய காலப்பகுதியில் மக்கள் சந்தித்த துன்பங்கள் வேதனைகள், புலப்பெயர்வுகள், இடப்பெயர்வுகளும் வார்த்தைகளால் சொல்லிவிட முடியாதவை. இவ்வாறாக அன்று முதல் இன்று வரை, ஆழிப்பேரலைகள், உயிர்கொல்லித் தொற்றுநோய்கள், கோர யுத்தத்தின் பல்வேறு தாக்கங்கள், காயங்கள், வடுக்களைத் தாங்கி, அழிவுகளைச் சந்தித்து, தான் எரியூட்டப்பட்ட சாம்பலில் இருந்து உயிர்பெற்றெழும் பீனிக்ஸ் பறவை போல மீண்டெழுந்த இவர்களால் 2022ஆம் ஆண்டில் கட்டியெழுப்பட்ட இந்த நான்காவது புதிய ஆலயம் தற்போது புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது. 30.05.2022இல் இந்த ஆலயத்தைத் திறந்து வைத்து 46 பிள்ளைகளுக்கு உறுதிப்படுத்தல் அருளடையாளத்தை வழங்கிய எமது அன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மீண்டும் 13.06.2022இல் திருவிழாத் திருப்பலிக்கும் தலைமை தாங்கி மீள்குடியேற்றப் பங்குமக்களாகிய எம்மேல் தனக்குரிய மேய்ப்பனின் கரிசனையையும் தந்தையின் பாசத்தையும் வெளிப்படுத்தியதோடு யூபிலி விழாவிற்கும் வருகைதந்தார்.

**யூபிலி விழாவும் ஊறணியம் வெளியீடும்**

பல தலைமுறைகளாக ஓரிடத்தில் வாழ்ந்து வரும் மக்களுக்கு, அவர்களது கிராமம் அல்லது நகரம், மொழி, மதம், பண்பாடு, வழிபாட்டுத் தலங்கள் போன்றவை புனிதமானவையாகவும் பெருமைக்கு உரியவையாகவும் உள்ளன. குறிப்பாக அவர்கள் தங்கள் மதத்தையும் வழிபாட்டுத் தலங்களையும் உயிரினும் மேலான பற்றுடன் பேணி வருவர். இதனால் தான் எமது கிராமத்தின் நானூறாண்டு கத்தோலிக்க வரலாற்றை, நமது கோடி அற்புதர் புனித அந்தோனியார் ஆலய, நூற்றியெழுபத்தைந்து ஆண்டுகள் வரலாற்றை, அனைவரும் அறிந்து கொள்ளும் பொருட்டு ஊறணியம் மலரை எம்மால் கூடுமான அளவிற்கு முதன்மைச்சான்றாதாரமாகவும் ஊறணி வரலாறு பற்றிப் பேசும் முதல் ஆவணமாகவும் எமது பாதுகாவலரின் விழாவில் வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

ஏனெனில் எமது ஆலயமும் கிராமமும் பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்திருப்பதால், எங்கள் மூதாதையர், தமது கத்தோலிக்க நம்பிக்கைப் பயணங்களில் கடந்து வந்த மேடு பள்ளங்களில் இருந்து நாம் ஏராளமாகக் கற்கவும் நல்லவற்றைத் தேர்ந்து தெளிந்து எதிர்கால வாழ்விற்குப் படிக்கற்களாக்கவும் ஊறணியம் உதவுகின்றது. இவ்விபரங்கள் சிலவற்றுக்குத் தெளிவான சான்றுகள் உள்ளன. வேறு சில வாய்மொழிப் பாரம்பரியங்களாகவும் பலரது உண்மையான வாழ்க்கை அனுபவங்களாகவும் உள்ளன. ஆயினும் வேறு சில விடயங்கள் பற்றிச் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் நிகழ்தகவு அடிப்படையில் முடிவுகளுக்கு வரவேண்டியுள்ளது. நினைவுக்கெட்டாத காலம் முதல் ஊரின் மேற்குக் கடலோரம் வருடத்தில் எட்டு மாதங்கள் நன்னீரூற்றொன்று கடலோடு கலப்பதாலும் பலர் அதில் குளித்துக் குணமடைவதாலும் ஊறணி என்று பெயர் பெற்றது எம் கிராமம்.

மேலும் 09-13ஆம் நூற்றாண்டுகளில் நெடுந்தீவு முதல் நாயாறுவரை வடபகுதிக் கடலோரம் குடியிருத்தப்பட்ட தேவர்குலப் போர்வீரப் பரம்பரையினரே ஊறணி மக்கள். இவ் வீரப் பரம்பரையினர் தாம்பெற்ற கத்தோலிக்க நம்பிக்கையைப் புனித அந்தோனி நாமங்கொண்டு தமது இரத்தச் சாட்சியத்தாலும், கண்ணீரும் வியர்வையும் கலந்த உழைப்பாலும் வாழ்ந்து எம்மிடம் கையளித்தனர். எம் முன்னோர்கள், மறைப்பணியாளர்களுக்காக இறைவனுக்கு நன்றி கூறி அவர்களின் ஆன்மா இறைபாதத்தில் இன்புற நாமெல்லோரும் வேண்டுவோம்.



# செபமாலையின் வீரர்கள்

**02**

## ஒரு ஆன்மீக ஆயுதத்தின் வரலாறும் அதன் வீரர்களும்

**Champions of the Rosary - The History and Heroes of a Spritual Weapon**
**by Donald H. Calloway MIC (Marian Fathers of the Immaculate Conception)**
**(–தமிழில் – அருட்பணி.எஸ்.வி.பி. மங்களராஜா) டொனால்ட் எச். கலோவே**
MIC (Marian Fathers of the Immaculate Conception)
அமல உற்பவ மரியாளின் குருக்கள் துறவறசபை

**காலச்சக்கரத்தில் செபமாலையின் மூலக்கூறுகள் பின் வருமாறு அமைந்துள்ளன :-**

1. அருள்மிகப்பெற்ற மரியே வாழ்க!
2. பரலோக மந்திரம்
3. செப மணிகள்
4. மரியாளின் சங்கீதம்

### அருள் மிகப்பெற்ற மரியே வாழ்க

◆ மரியாளும் அவளது பிள்ளைகளும் தாக்குதலுக்குள்ளானார்கள் என்று இறைவன் அறிந்திருந்ததால் அவர் இந்த வாள் மரியாளின் வாளாக இருக்க வேண்டுமெனக் கருதினார்.

◆ எனவே இந்த வாளின் அச்சின் முதல் மூலக்கூறு இனிமையான 'வாழ்க' - 'அருள் மிகப் பெற்றவரே வாழ்க' ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் (லூக் 1:28) என்பது மிகவும் பொருத்தமானதே.

◆ இறைவனால் தூண்டப்பட்டு அதிதூதர் கபிரியேலினால் விடுக்கப்பட்ட இவ்வறிவிப்பு இறைதூதரின் வாழ்த்துரை எனப்படுகின்றது.

◆ இதுதான் வாழ்வளிக்கும் இறை-மனிதனின் மறையுண்மைகளின் முதல் மூலக்கூறு - இந்த வாளை உருவாக்க முதலில் தேவைப்பட்ட மூலக்கூறு இது தான்.

◆ பின்னர் இடம் பெறும் மறையுண்மைகள் இதனைத் தொடர்ந்தே வருகின்றன. ஏனெனில் கன்னிமரியாள் இல்லாது இறை-மனிதனோ அவரது மீட்பின் மறையுண்மைகளோ இல்லை. மீட்பு இவ்வுலகுக்குக்கன்னி மரியாள் வழியாகவே வருகின்றது.

◆ இந்த வாளின் பாகங்களை ஒருங்கிணைப்பதற்கு இறை கைவினைஞர் கத்தோலிக்கத் திரு அவை எனும் வேலைத்தலத்தைப் பயன்படுத்துகின்றார்.

◆ எல்லாம் வல்ல இறைவனாகிய இவர் இந்த வாளை ஒரு செயலால், ஒரு வார்த்தையினாலே உருவாக்கியிருக்கலாம். எனினும் கால ஓட்டத்தில் இந்த வாள் உருவாக்கப்பட வேண்டியிருந்ததால் இந்த வலைத் தலத்தில் இந்த வாள் உருவாக்கப்பட நூற்றாண்டுகள் சில சென்றன.

◆ உதாரணமாகக் கத்தோலிக்க திருஅவை 6ம் நூற்றாண்டளவில் தான் வானதூதரின் வாழ்த்துரையையும் நற்செய்தியின் வாழ்த்துரையையும் இணைத்தது.

◆ நற்செய்தி வாழ்த்துரை என்பது புனித எலிசபேத்தம்மாள் இறைவனால் தூண்டப்பட்டு கன்னிமரியாளுக்குக் கூறிய வாழ்த்துரை :- "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர் உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே" (லூக்.1:42)

◆ 6ம் நூற்றாண்டில் திரு வருகைக் காலத்தின் 4ம் வாரத்தின் ஞாயிறன்று காணிக்கை வேண்டுதலில் இவ்விரண்டும் (வானதூதரின் வாழ்த்துரையும், நற்செய்தி வாழ்த்துரையும்) ஒன்று சேர்க்கப்பட்டு இந்த வாளின் பிரதான பகுதி (கைப்பிடி பகுதி) உருவாக்கப்பட்டது.

◆ இந்த வார்த்தைகள் விசேட இறை தூண்டுதல் பெற்றவை மட்டுமல்ல, எக்காலமும் அழியாதவை "அருள் மிகப்பெற்றவரே வாழ்க ஆண்டவர் உம்மோடு இருக்கிறார். பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவரே உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே"

◆ இறைவார்த்தையிலிருந்து நேரடியாக எடுக்கப்பட்ட நற்செய்தி வாழ்த்துரையும், வானதூதரின் வாழ்த்துரையும் ஒன்றிணைக்கப்பட்டு 'ஆவே மரியா' அல்லது 'மரியே வாழ்க' என்று தற்போது வழக்கில் உள்ள செபத்தின் முதற்பாதி மட்டும் உருவானது.

◆ பல நூற்றாண்டுகளின் பின் புனித லூயிஸ் டி மொன்போர்ட் (1673 - 1716) பின் வருமாறு குறிப்பிடுவார். 'அருள் மிகப் பெற்ற மரியே!' எனும் செபப்பகுதி இந்த வாளின் மிகக் கூர்மையான பிரகாசிக்கும் முக்கிய பகுதி - இது இறை வார்த்தையுடன் இணைந்து மிகவும் கடினமான இதயம் கொண்டவர்களையும் மனமாற்றக் கூடிய ஊடுருவும் வல்லமையைப் போதிப்பவர்களுக்கு வழங்குகின்றது.

◆ 11ம் நூற்றாண்டு வரை 'அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க!' எனும் செபம் வானதூதரின் வாழ்த்துரையையும், நற்செய்தியில் உள்ள வாழ்த்துரையையும் இணைந்ததாக மட்டுமேயிருந்தது. ஒளிரும் இந்தக் கருவிக்கு (வாளுக்கு) ஒரு பரிந்து பேசும் பரிமாணத்தை வழங்குவதற்கு இறை கைவினைஞர் எதிர்பாத்திருந்தார். தமது திரு அவை இத்திசையில் பயணிக்கும் என்று இவர் பொறுமையுடன் காத்திருந்தார். அந்நேரம் வரும் வரைக்கும் 'அருள் மிகப்பெற்ற மரியே வாழ்க!' எனும் செபம் மரியாளைப் புகழ்ந்து மகிமைப்படுத்தும் செபமாகவே புரிந்து கொள்ளப்பட்டு வந்தது. அவளை நோக்கி வேண்டுதல் செய்து விண்ணப்பங்களை முன்வைக்கும் போது அவளை வாழ்த்தும் ஒரு செயற்பாடாகவே இருந்து வந்தது. 'அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க!' எனும் செபம் நேரடியான வேண்டுதல் பரிமாணத்தைக் கொண்டிராதபோதும் இது கன்னிமரியாளிடம் ஒரு குறிப்பிட்ட கொடையை முறைப்படி விண்ணப்பிப்பதற்கு ஒரு ஆயத்த செபமாகக் கருதப்பட்டது. இவ்வாறான மிக அழகிய வாழ்த்தினால் கன்னிமரியாள் மேன்மைப்படுத்தப்படும் போது அவள் அதற்குப் பதிலளிக்குமுகமாகத் தம்மை வெளிப்படுத்தும் போது பரிசுத்த ஆவியின் உதவியுடன் நிறையருளையும் பெற்றுத்தராது விடமாட்டாள்.

### பரலோக மந்திரம்

◆ முழுமையான அமைப்பைப் பெறப் பல நூற்றாண்டுகள் எடுத்த 'அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க!' செபத்தைப் போலல்லாது இந்த வாளின் மிகவும் வல்லமையும் பெருமை மிக்கதுமான இச்செபம் அறிமுகமாகும் போது முழுமையாகவிருந்தது. இது தான் இறை-மனிதனாலேயே ஆக்கப்பட்ட செபம். இதுதான் இறைவனாலேயே தரப்பட்டதும் விண்ணகத்திலுள்ள எங்கள் தந்தை என்று குறிப்பிடப்படும் செபம். (மத்.6:9-13, லூக்.11:2-4)

◆ ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து இவ்வுலகில் நடமாடித் தம் சீடர்களுக்கு இந்த செபத்தைக் கற்றுக்கொடுத்ததிலிருந்து இந்த 'விண்ணகத்திலுள்ள எங்கள் தந்தையே' எனும் செபம் கிறிஸ்தவர்களுக்கு மிகவும் பிடித்தமான செபமாக இருந்து வந்திருகின்றது.

◆ இந்தச் செபம் இயேசுக்கிறிஸ்துவைப் பின்பற்றுபவர் எவ்வாறு செபிக்க வேண்டுமென்பதற்கு மிகச்சிறந்த உதாரண-மாகும்.

பாப்பரசர் 13ம் சிங்கராயரின் வார்த்தைகளில் சொல்வதாயின் "மகிமை மிக்க இறைவனுக்கு முன்னிலையில் எம்மை இட்டுச் செல்வதற்கு பரலோக மந்திரத்தில் உள்ள வார்த்தைகள் போல வேறு எந்த வார்த்தைகளும் கிடையாது."

◆ 13ம் நூற்றாண்டுக்கு முன்னர் இறை கைவினைஞரானவர் தமது வேலைத்தளத்தில் 'அருள் மிகப் பெற்ற மரியே!' செபத்தையும் பரலோக மந்திரத்தையும் அருகருகே வைத்திருக்க ஏற்பாடு செய்திருந்தார். புனிதர்கள் வாழ்விலும் அவ்வப்போது இவை ஒன்றோடொன்று இணைந்திருந்தன. ஆயினும் ஒரு பக்திமுயற்சியின் அங்கமாக இவை இணைந்திருக்கவில்லை. 13ம் நூற்றாண்டில் தான் தீயோனுடன் மேற்கொள்ள வேண்டிய எதிர்காலப் போர்களின் நிமித்தம் இறைகைவினைஞர் இந்த இரண்டு செபங்களையும் ஒன்றிணைத்தார். இது ஒரு ஆன் மீக வாளாக இருந்தாலும் எபிரேயர் 4:12 ல் குறிப்பிடுவது போல "கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது, இரு பக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளிலும் கூர்மையானது. ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது. எலும்பு மூட்டையும், மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது. உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப்பார்க்கிறது" இவ்வாறாக ஒரு தொட்டுணரக் கூடிய பொருளாக இது சித்தரிக்கப்படுகின்றது. ஆக எல்லா வாள்களும் மனிதருடைய கரங்களிலேயே ஏந்தப்பட்டு கையாளப்படுகின்றன. இவ்வாறாக இறைகைவினைஞர் தனது வேலைத்தளத்தில் தனக்கு வேண்டியதை அதாவது இந்த ஆன்மீக வாளுக்கு ஒரு புலன்களால் உணரக்கூடிய அமைப்பை வழங்குகின்றார்.

(தொடரும்...)

## 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. தே. யூட்தாஸ்

**265. திரு அவையின் இரண்டாம் கட்டளை எது?**

ஆண்டிற்கு ஒரு முறையாவது தகுந்த தயாரிப்புடன் ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கேற்கவேண்டும்.

**266. திரு அவையால் நியமிக்கப்பட்ட மனமாற்றத்தின் அல்லது பரிகாரத்தின் நாட்கள் எவை?**

வருடத்தில் வருகின்ற அனைத்து வெள்ளிக்கிழமைகளும் தவக்காலமும் திரு அவையால் நியமிக்கப்பட்ட பரிகாரத்தின் அல்லது மனமாற்றத்தின் நாட்களாகும்.

**267. மனமாற்றத்தின் அல்லது பரிகாரத்தின் நாட்கள் என்றால் என்ன?**

செபத்தில் இணைந்திருத்தல், பிறரன்புச் செயற்பாடுகளைச் செய்தல், சுயத்தை மறுத்தல் போன்ற செயற்பாடுகளை சிறப்பான முறையில் மேற்கொள்ளும் நாட்கள் மனமாற்றத்தின் அல்லது பரிகாரத்தின் நாட்கள் என அழைக்கப்படுகின்றன.

**268. வெள்ளிக்கிழமைகளில் நாங்கள் கடைப்பிடிக்க வேண்டிய பரிகாரங்கள் எவை?**

பெருவிழாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாமிச தவிர்ப்பு, மதுபானம் தவிர்த்தல், கேளிக்கைகளைத் தவிர்த்தல், ஏனைய ஏதாவது பரிகார செயல்களை மேற்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம் (14 வயதிற்கு மேற்பட்டோர் ஒறுத்தல் செய்ய கடமைப்பட்டுள்ளனர்).

**269. திருநீற்றுப் புதனிலும் பெரிய வெள்ளிக்கிழமைகளிலும் எவ்வாறான பரிகாரச்செயலை நாம் செய்ய வேண்டும்?**

திருநூற்றுப் புதனிலும், பெரிய வெள்ளிக்கிழமைகளிலும் உபவாசம் இருந்து வெள்ளிக்கிழமைகளிற்குரிய பரிகாரங்களைச் செய்ய வேண்டும்.

**270. உபவாசம் என்றால் என்ன?**

ஒப்பீட்டளவில் குறைவான உணவை உட்கொள்ளுதல் உபவாசம் எனப்படும். திரு அவையானது உபவாசத்தின் வழியாக எமது உடலைக்கட்டுப்படுத்தி, எமது பாவங்களுக்காக இறைவனைத் திருப்திப்படுத்த வேண்டுமென்று கட்டளையிடுகின்றது (18 தொடக்கம் 60 வயதிற்குட்பட்டவர்கள் உபவாசம் செய்யக் கடமைப்பட்டுள்ளனர்).

(தொடரும்...)

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

**24**

– அருட்பணி எஸ். ஜே. இம்மானுவேல்



(சென்றவாரத் தொடர்ச்சி..)

**ஆசியாவையும் எம்மையும் பொறுத்த மட்டில், இந்நிலைமை தான் தமிழ் விடுதலை இறையியல் தோன்றுவதற்குத் தடையாக இருக்கின்றது. ஏன்?**

ஆனால் உரோமையில் அவைகள் அதிகாரிகளுக்குப் பணியும் பிரமாண்டமான அமைப்புகளாக வளர்ந்தன. இவ்விதமாக அமைப்பில் பெலப்படுத்தப்பட்ட திருஅவைகள் தான் எம் மத்தியிலும் வளர்ந்து வந்திருக்கின்றன. (Institutionalised oman christianity) இப்பின்னணியில், எழும் கேள்வி: யூத கிறிஸ்தவம் விருத்தசேதனக் கடமையுடன் தொடர்ந்தது போல, தமிழ்க் கிறிஸ்தவமும் சாதி வேறுபாடுகளின் மத்தியில் சமாளிக்கும் கிறிஸ்தவமாகத் தொடரலாமா? இல்லவே இல்லை!

கிறிஸ்தவர்கள் தமது நம்பிக்கையின் (விசுவாசத்தின்) சாராம்சத்தைக் குறைக்கவோ மாற்றவோ முடியாது. இறைவனே நமது ஒரே தந்தையென்றும் மனிதர்கள் நாம் எல்லோரும் அவரின் சம உரிமைகளுடைய பிள்ளைகளும் சகோதரர் என்றும், ஒருவரை ஒருவர் அன்பு செய்து மன்னித்து வாழ வேண்டுமென்றும், வறியவர், பெலவீனமுற்றோருக்கு முன்னுரிமை அன்பு இரக்கம் காட்ட வேண்டுமென்றும் இயேசு கற்பித்திருக்கிறார்.

இவைகளுக்கு அப்பால் நானே ஒளியும் உப்பும், என்றவர், தீய சக்திகளை ஒழிக்க, அநீதி ஒடுக்கு முறைகளுக்கெதிராக நீங்களே ஒளியாகவும் உப்பாகவும் இருப்பீர்களென எம்மைப் பணித்தார், ஊக்குவித்திருக்கிறார்.

ஆகையினால் எமது தமிழ்ச் சமூகத்தின் சூழலினாலும் எம் திருஅவை அமைப்பின் அதிகாரிகளினாலும் நிர்ணயிக்கப்பட்டு, நாம் சமாளிக்கும் கிறிஸ்தவ வாழ்விற்குத் தள்ளப்பட்டாலும், நாம் ஒளியாகப் பிரகாசிப்பதற்கும் உப்பாகச் சமூகத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும், நற்செய்தி விழுமியங்களை வித்தாக விதைப்பதற்கும், எம்மிடம் உள்ளதைப் பகிர்ந்து கொள்வதற்கும் எதிராக எழும் தடைகளை எமது அடிப்படை விசுவாசத்தில் தளராது விளக்கி மனித விடுதலைக்காகத் தொடர்ந்து போராடுவோம்! (தொடரும்...)



# மறைவாழ்வில் புதிய முன்னேற்றங்கள்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**திருவிழாக்களில் யாழ்.மறைமாவட்டத்தில் பணியிலிருந்த அருட்பணியாளர்கள்,**

1958 டிசம்பர் 18இல் பண்டத்தரிப்பில் புதிய கட்டிடத்தில் தொடங்கிய நவதுறவு வாழ்வுப்பயிற்சி 1970 இல் பாஷையூருக்கு மாற்றப்பட்ட போது, பண்டத்தரிப்பு நவதுறவு இல்லம் ஆயரால் மறைமாவட்டத் தேவைகளுக்காக விலைகொடுத்துப் பெறப்பட்டது. இது தற்போது யாழ். மறைமாவட்டத்தில் உள்ள திருநிலை, துறவியர், பொதுநிலையினரின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது.திருச்செபமாலைத் துறவற சபை இவர் மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்ற வேளை முழுமையாக யாழ். ஆயரின் ஆளுகையின் கீழ் ஏற்கெனவே உருவாகி நிர்வகிக்கப்பட்டுக் கொண்டிருந்த சபையே செபமாலைத் துறவற சபையாகும். இதில் ஆண்களுக்கான பிரிவில் இவர் பல முன்னேற்றங்களைச் செய்ய வேண்டியிருந்தது. ஏற்கெனவே பதினோராம் பத்திநாதர் திருத்தந்தை 1926.02.18 இல் வெளியிட்ட "திருஅவையின் உண்மைகள்" (Rerum Ecclesiae) என்ற சுற்றுமடலின்படி ஆயர் கியோமார் அ.ம.தி.யின் பணிப்பின் பேரில் 1928.02.02 இல் தோலகட்டியில் ஆண்களுக்கான துறவற சபையையும், 1948.09.08இல் வசாவிளானில் பெண்களுக்கான துறவற சபையையும்அருட்தந்தை பி.ஏ. தோமஸ்அ.ம.தி. நிறுவியிருந்தார். இவ்விரு சபைகளின் இலங்கை மடங்களுக்கான காணிகளை அன்பளிப்புச் செய்தவர் ஆயர் எமிலின் நண்பரான செவாலியர்(பரிமேலர்) சேர் சிற்றம்பலம் கார்டினர் ஆவர்.

செபம், தபம், பாவப் பரிகாரம், கடின உழைப்பு, மௌனம், உள்மட வாழ்வு போன்றவை இச்சபையின் இன்றியமையாத செயற்பாடுகளாகும். இவ்வாறு மக்களின் சொல், செயல், சிந்தனைகளை மாசுபடுத்தும் தீய சக்திகளை உலகமெங்கும் முறியடிப்பதே இச்சபையின் நோக்கமாகும். 1950 இற்கு முன்பு ஆண்கள் துறவறசபையில் ஏற்பட்டிருந்த நிர்வாகக் குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சீர் செய்யப்பட்டது போன்று ஆயர் எமிலின் காலத்திலும் சீர் செய்யப்பட வேண்டி இருந்தன. 1958.05.27இல் ஆயரின் பணிப்பில் நிர்வாகப் பொறுப்பேற்ற அ.ச.வில்லவரசிங்கம் அ.ம.தி. 1966.11.01இல் பொறுப்பேற்ற ஜோ.பொ.இ. செல்வராஜா போன்றோர் சபையினர் செய்த கைத்தொழில்களைக் குறைத்து, தேவைக்கேற்ப வெளிவேலையாட்களையும் குறைத்து சபையின் ஒழுங்குகளைச் சீராக்கி இலாபகரமாக இயக்கி இத்தாய் மடம் அழிந்து போகாது மீட்டனர். இதற்கு ஆயரின் சமயோசித மதிநுட்பமே காரணம். சுற்றியிருந்த மக்களின்எதிர்ப்புக்கள், புறங்கூறுதல்கள் மத்தியிலும், ஏற்கனவே விசா தேவையற்ற நிலையில் இந்தியாவிலிருந்து நேரடியாக வந்து சேர்ந்த அருட் சகோதரர்களுடன் மட்டும் இயங்கிய சபை, உள்ளூர் அழைத்தல்கள் போதாமைகாரணமாக, வடக்கத்தியாரின் சபை என்னும் ஏளனங்கள் மத்தியிலும், அருட் சகோதரர்கள் சிலர் நிலத்தின் விளைபொருட்கள் மற்றும் தொழிற்சாலைகளின் -உற்பத்திகளை யாழ். நகரத்திற்கு விற்பனை செய்யச் சென்றதால் ஏற்பட்ட விமர்சனங்கள் மத்தியிலும் சபையின் புனரமைப்பை ஆயர் சிரமேற் கொள்ளாது விட்டிருந்தால் சபை என்றோ அழிந்திருக்கும்.

மேலும் இவரது பணியில் ஜோ.பொ.இ. செல்வராஜா வழிகாட்டுதலாலேயே பெண்களுக்கான செபமாலைத் துறவற சபையும் துரித வளர்ச்சி கண்டு இலங்கையில் ஏழும், இந்தியா வில் ஏழுமாகப் 14 மடங்கள் தோன்றின. இவ்வாறாக "இவ்விருசபைகளும் மறைமாவட்டத்தின் சக்தி இல்லம்" என்று ஆயர் எமில் பெருமையுடன் சொல்லிக் கொள்ளும் அளவிற்கு இவை முன்னேற்றமடைந்தன. திருச்சிலுவைக்கன்னியர் சுவிற்சலாந்து மென்சிங்கன் தாய்மடத்தின் ஐரோப்பிய திருச்சிலுவைச் சபைச்சகோதரிகள் 1930இல் ஊரகாவற்துறையில் காலடிவைத்தது முதல் 1960வரை பலசிரமங்கள் மத்தியில் யாழ்.மறைமாவட்டத்தின் வைத்தியசாலைகளில் மக்களின் புரிந்துகொள்ளாத் தன்மைகள் நாட்டின் முரண்பாடான காலநிலை மத்தியில் நோயாளர் பராமரிப்புப் பணியினை மேற்கொண்டனர். ஊர்காவற்றுறை, மூளாய், யாழ்ப்பாணம், அரச வைத்தியசாலைகளில் பணியாற்றிய இவர்கள் குருநகரில் தாய் மடத்தையும், நவதுறவு மடத்தையும் கொண்டியங்கினர் (சத்திய வேத பாதுகாவலன் 01.03.1956). இந்தியாவில் 1956 செப்ரெம்பர் 14இல் பணியின் பொன் விழாவையும், இலங்கையில் 1955 செப்ரெம்பர் 14இல் தமது பணியின் வெள்ளி விழாவையும் கொண்டாடிய தோடு, இலங்கையில் தனித்தியங்கத் தொடங்கினர். ஏற்கனவே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூவர் இச்சபையில் பணியாற்றிக் கொண்டிருந்தனர்.

### அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா

மேலும் ஐந்து இலங்கையர் தமது பயிற்சியின் பின்பு 1957இல் நவதுறவுப் பயிற்சிக்கென இணைக்கப்பட்டனர். இவர்களில் மூவருக்கு வாக்குறுதி வழங்கும் நிகழ்வை யாழ். குருநகர் மடச் சிற்றாலயத்திலேயே அருட்தந்தையர்கள் எச். லெக்குத்தூர் அ.ம.தி., வ. தியோகுப்பிள்ளை இருவரும் உதவிபுரிய இச்சுங்குத் திருப்பலியை ஆயர் எமிலியானுஸ்பிள்ளையே இச்சபையின் யாழ். வரலாற்றில் முதல் நிகழ்வாக நிகழ்த்தினார்.

இருவர் மென்சிங்கனில் பயிற்சி பெற்று அங்கேயே அந்நிலையினைப் பெற்றனர் (சத்திய வேத பாதுகாவலன் 04.04.1957). 1960 இல் ஐரோப்பிய மறையறிவிப்பாளர்களின் கட்டாய வெளியேற்றச் சட்டம் இச்சபையைப் பாதித்த போது இவர், தமது உயர்மட்ட அரச தொடர்புகள் காரணமாகக் கொழும்பு புனித மிக்கேல் வைத்தியசாலையிலும், பேராயர் இல்லத்திலும் பணிபுரியவும் பல்வேறு தேவைகளுக்குக் கொழும்புக்குச் செல்லும் இளம் பெண்கள் மற்றும் அங்கு பல நிறுவனங்களில் பணிபுரியும் இளம் பெண்கள் மற்றும் கல்வி கற்கும் இளம் பெண்களின் பாதுகாப்புக் கருதி விடுதியொன்றை இல 61, கிறகரீஸ் றோட் பொரலையில் நடாத்தவும் அனுமதி பெற்றுக் கொடுத்ததுடன் இதற்கான காணியையும் சேர் கார்டினர் சிற்றம்பலத்திடம் இருந்து அன்பளிப்பாக பெற்றுக்கொடுத்தார்.

இன்றுவரை யாழ்ப்பாணத் திலும் இச்சபை தொடர்ந்து இயங்க இவரது அந்த நாள் முயற்சிகளே காரணமாகின. அப்போஸ்தலிக்கக் கார்மேல் சபை இங்கிலாந்தில் 1823இல் ஆங்கிலிக்கன் சபையில் பிறந்து சோபி என்னும் பெயருடன் வளர்ந்து 1840 இல் மேரி வெரோணிக்கா என்னும் பெயருடன் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்து. அருட்சகோதரியாகிய பெண்மணியால் பிரான்ஸ் நாட்டின் பெயோணநகரில்தொடங்கப்பட்டஇச்சபை திருமலை-மட்டுநகர் ஆயர் றொபெசேயின் அழைப்பை ஏற்று 1922இல் திருகோணமலையில் தன் பணிகளைத் தொடங்கியது. பதுளையில் இவர்கள் நடாத்திய கண்காட்சி நிகழ்வில் பங்குபற்றிய அந்நாள் யாழ். அருட்பணி முதல்வர் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின் தூண்டுதல் காரணமாக ஆயர். கியோமரின் அழைப்பிற்கமைய 1947.12.29 வட மாகாணத்தில் கரம்பனில் மடம் தொடங்க வந்த வேளை, அந்நாளின் அச்சுவேலிப் பங்குத்தந்தை க.தோ. பாலசுந்தரம் அ.ம.தி., ஆயரிடம் வைத்த வேண்டுகோளின்படி அச்சுவேலியில் அதேநாள் பணியை ஆரம்பித்தனர்.

சேர். சிற்றம்பலம் கார்டினரே அச்சுவேலியில் மடத்திற்கும் புனித திரேசாள் பாடசாலைக்குமான காணி முழுவதையும் அன்பளிப்புச் செய்தார். 1922 பெப்ரவரி 05இல் இலங்கைக்கு வந்த அருட்சகோதரிகள் மாறிசாட்ஸ், லொறன்சியா, கிளேயா, யுஸ்தீனா ஆகிய நால்வரில் அருட்சகோதரி கிளேயா இம்மடத்தின் முதல் தலைவியானார்.

# இரணைமாதா நகர் செபமாலை மாதா ஆலய அபிஷேகமும் நேர்ந்தளிப்பும்

புனித செபமாலை அன்னையின் பெயர் கொண்டு 2003ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்ட இவ் ஆலயம் 20 ஆண்டுகள் கடந்த நிலையில் 10.06.2023 அன்று யாழ் ஆயர் அருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் அபிஷேகம் செய்யப்பட்டு நேர்ந்தளிப்புச் செய்யப்பட்டது.

திருப்பலியைத் தொடர்ந்து பங்குக் குருமனையும் ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் பங்குத் தந்தையர்கள், குருக்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் மற்றும் மண்ணின் மைந்தர்களான குருக்கள், அருட்சகோதரிகள், பங்கு மக்கள், வெளிநாட்டு உறவுகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

ஆலயத் திறப்பு விழாவிற்கான பணிகளில் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய பலரும் ஆயர் அவர்களால் கௌரவிக்கப்பட்டனர். குறிப்பாக ஆலய அபிஷேகத்தை முன்னிட்டு சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

ஆலயத்தின் அழகைக் கண்டு அனைவரும் வியந்து நிற்க, எம் பங்குத் தந்தை எமில் இராஜேஸ்வரன் போல் அவர்கள் தலைமையில் ஆலய அருட்பணிச் சபையினர், விழாக் குழுவினர், கட்டடக் குழுவினரும் இணைந்து செயற்பட பங்கு மக்களின் ஒத்துழைப்புடன் ஆலய அபிஷேகமும் நேர்ந்தளிப்பும் இடம்பெற்று இனிதே நிறைவு பெற்றது.

# தேசிய இலக்கிய செய்யுள் போட்டியில் முதலிடம் பெறும் திரு.அ.மங்களராசா



கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச கலாசார மண்டபத்தில் நடைபெற்ற தேசிய இலக்கிய விருது வழங்கல் விழாவில் தேசிய இலக்கியப் போட்டிக்கான செய்யுள் ஆக்கப் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமைக்காக புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் திரு.அ.மங்களராசா அவர்களுக்கு விருது வழங்கப்பட்டது.

கிளிநொச்சிப் பங்கசை சேர்ந்த இவர் 2013ம் ஆண்டில் இருந்து இன்றுவரை பிரதேச மாவட்ட தேசிய மட்டத்தில் 31 தடவைகள் வெற்றியீட்டியுள்ளார்.

இவர் 2019 இல் நடைபெற்ற தேசிய இலக்கிய விழாவில் பாடல் ஆக்கப் போட்டியில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் தனதாக்கிக் கொண்டார்.

திரு.அ.மங்களராசா அவர்கள் கிளிநொச்சி கலாசாரப் பேரவையும், கவிஞர் கரை எழில் என்ற பட்டத்தை 2015 ம் ஆண்டு பெற்றுக்கொண்டார்.

வாழ்த்துரைகள், பாராட்டுரைகள், இரங்கலுரைகள், கவிதைகள், பாடல்கள் என வேண்டுவார்க்கு எழுதிக் கொடுத்தும் 2018 இல் காவலன் நடத்திய கவிதைப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தையும் பெற்றுள்ளார்.

# யதார்த்தத்தைக் காண்போம்

சிவனின் பாதம்
புத்தரின் பாதம்
ஆதாமின் பாதம்
அல்லாவின் பாதம்

இவையாவும் மதம் கொள்ளா
வரலாற்றின் மலைமீது
இருக்கு ஆனால்
மனித மனங்களோ
மதங்கொண்டு
மண்மீது இருக்கு

அறங்கள் யாவும்
கழையப்பட்டுவிட்ட
எம் தேசத்தில்
அறகலய-வுக்கும்
அர்த்தம் கொடுக்க
முடியாமல் போய்விட்டதோ?
என எண்ணத் தோன்றுகிறது

தொலைந்து போய்விட்ட
தொல்லியல் தடயங்களும்
மானிட வாழ்வின்
மகத்துவத்தை இன்று
தோண்டிப் பார்க்க
வேண்டியிருக்கு

நாம் இன்று
நீதியையும் நிதியையும்
சர்வதேசத்திற்குள்
தேடுவோம்
எம் இன, மத, நிறக்
குரோதங்களைக்
களைந்து யதார்த்தத்தை
எம் தேசத்தில்
விதைப்போம்

யோண் பற்றிக்

## விண்ணக வாழ்வில் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மடியில்
16 . 12 . 1924

இறை அடியில்
10 . 06 . 2020

அமரர்

### திரு. இறமேந்து தேவசகாயம்

(ஓய்வுநிலை அதிபர்)

“ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்” (தி.பா.27:4)

அன்பான இறைவா!
இவ் உலகத்திலிருந்து உம்மிடம் அழைத்துக்கொண்ட உமது அடியான் அமரர் இறமேந்து தேவசகாயம் அவர்களை உமது நித்திய வான்வீட்டில் சேர்த்தருள வேண்டுமென்று இரந்து மன்றாடுகின்றோம். ஆமென்

3ம் வட்டாரம்,
மண்டைதீவு.

இவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

AD- 37

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

“ஆண்டவர் தம் அன்பரின் சாவு ஆண்டவர் பார்வையில் மிக மதிப்பிற்குரியது”(தி.பா.116:15)



மண்ணில்
23 . 02 . 1943

விண்ணில்
19 . 06 . 2008

### அமரர்: மார்க்கு யாக்கோப்பு

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் பாசத்தின் உறைவிடமாய்...
நற்குணத்தின் சிகரமாய், இறைபக்தியில் சிறந்து விளங்கி – எம்மை
விசுவாச வாழ்வில் வாழ வழி வகுத்த எம் தந்தையே
பதினைந்து வருடங்கள் பஞ்சாய் பறந்து விட்டாலும்
பாசமான உம்மை என்றும் மறவோம்.

உம் பிரிவால் வாடும்
மனைவி,பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை,
கிளாலி,எழுதுட்டுவாழ்.

கோயில் வீதி
யாழ்ப்பாணம்

AD/ 41

## இளையோருக்கான நாடக அரங்கியல் பயிற்சி



யாழ் திருமறைக்கலாமன்றத்தினால் முன்னெடுக்கப்பட்ட இளையோருக்கான நாடக மும் அரங்கியலும் தொடர்பான பயிற்சிப்பட்டறை கடந்த 10ஆம் திகதி றக்கா வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலாமுற்றத்தில் நடைபெற்றது.

காலை 8:30 மணியிலிருந்து மாலை 4 மணிவரை நடைபெற்ற இப்பயிற்சி பட்டறையில் இளவாலை, புத்தளம், யாழ்ப்பாணம் ஆகிய பிராந்திய மன்றங்களைச் சேர்ந்த 60 வரையான இளையோர்கள் கலந்து பயனடைந்தனர்.

## விண்ணகப் பிறப்பில் 4ம் ஆண்டு



அமரர்

### திருமதி மரியா மின்னொளி ஜீலியன்

(லூர்த்துமலர்)

14. 06. 2023 அன்று எமது குடும்பத்தலைவியின் பிறந்ததினம், விண்ணகப்பிறப்பின் 04வது ஆண்டு நிறைவில் அன்போடு உன்னை நினைவு கூருகின்றோம். இம் மகிழ்வான நாள் இன்று எம்மோடு நீ இல்லையென்றாலும் எம் உள்ளத்தில் என்றும் வாழ்கின்றாய். இறைவனோடு இணைந்திருந்து மகிழ்ந்திருக்க வேண்டுகின்றோம்.

இவர் வாழ்வுக்காக நன்றி கூற 14. 06. 2023 திகதி புதன் கிழமை காலை 6:00 மணிக்கு சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் பங்கு பற்றி, அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கும் படி அன்புடன் அழைக்கின்றோம்.

இவரது பிரிவால் துயருறும்
அன்புக் கணவர்,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

819, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
021 222 9752
077 749 8865

AD- 38

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணகப் பிறப்பு
18 . 09 . 1938

விண்ணகப் பிறப்பு
10 . 06 . 2022

### மேரி இமக்குலேற் சில்வெஸ்ரர்

ஆண்டு ஒன்று ஓடிற்றோ உமை இவ்வுலகில் நாமிழந்து
வையகத்தை விட்டு நீர் நீங்கிப் போனாலும்
நீங்காமல் உம் நினைவு எம்மோடு நிறைந்திருக்கும் அம்மா .......
பொன்னோடு பொருள் சேர்த்துப் பெரு வாழ்வு வாழ்ந்தாலும்
அம்மாவின் நிழலின் கீழ் வாழ்கின்ற வரம் வருமோ!!!
உம் உதிரத்தால் எமக்குள் உம்மை சுமக்கின்றோம்
உடலைப் பிரிந்தோமே தவிர உம்மையல்ல
என்ன செய்வது எம் மனம் ஏங்குகிறது!
அழுத விழிகளுக்கு ஆறுதல்
காட்ட ஒரு முறையாவது வாங்க அம்மா உங்கள் முகம் காண.....
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...

சுருவில்

AD- 39

## 53ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணகப் பிறப்பு
06 . 10 . 1962

விண்ணகப் பிறப்பு
26 . 06 . 1970

### செல்வி. மிரியம் சாமினி சில்வெஸ்ரர்

‘நானோ கடவுளின் அண்மையே எனக்கு நலமெனக் கொள்வேன்’ (சங் 73: 28)

இரக்கம் நிறைந்த இறைவன்
இவருக்கு நித்திய இளைப்பாற்றியை அளிப்பாராக

குடும்பத்தினர்

## திருத்தந்தையின் உடல்நிலை நன்றாகத் தேறி வருகிறது

குடலிறக்க அறுவை சிகிச்சை செய்துகொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உடல்நிலை நன்றாகத் தேறி வருவதாகவும், திருநற்கருணைப் பெற்ற அவர், தன் அலுவலகப் பணிகளை மருத்துமனை அறையிலிருந்தே கவனித்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரின் இதயத்துடிப்பும் இரத்த அழுத்தமும் சீராக இருப்பதாகவும் மருத்துவக்குழு தெரிவித்துள்ளது.மூச்சு தொடர்பாக அவர் சில பயிற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், ஓரளவு நடக்கத் துவங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நண்பகல் மதிய உணவை திருத்தந்நை பிரான்சிஸ் அவர்கள், தனக்கு உதவி வரும் மருத்துவர்கள், தாதியர், ஏனையப் பணியாளர்கள், மற்றும் தனக்கு பாதுகாப்பு வழங்கும் காவல்துறையினர் ஆகியோரோடு இணைந்து உண்டு மகிழ்ந்தார்.

# குருநகர் மீனவர்கள் மண்டைதீவில் கொல்லப்பட்ட நினைவு நாள்



1986ம் ஆண்டு மண்டைதீவுக் கடற்பரப்பில் கொல்லப்பட்ட 31 குருநகர் மீனவர்களின் 37ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு கடந்த 10ஆம் திகதி நடைபெற்றது.

புனித யாகப்பர் ஆலய உதவிப்பங்குத்தந்தை அருட்தந்தை தயதீபன் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நினைவுத் திருப்பலியும் தொடர்ந்து நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான பங்குமக்கள் கலந்து இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

# சர்வதேச ஆங்கில இசை, பேச்சு, நாடகப் போட்டிகளில் பதக்கங்களை வென்ற சிறார்கள்



யாழ். நக்கா வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற ஓவியக் கூடத்தில் நடைபெற்று வரும் ஆங்கிலக் கற்கை நெறியில் கல்வி பயிலும் மாணவர்கள், சர்வதேச ஆங்கில இசை, பேச்சு மற்றும் நாடக நிறுவனம், பிரித்தானியா மற்றும் சர்வதேச ஒன்றியத்தின் அனுசரணையில் நடாத்திய ஆங்கிலப் பரீட்சையில் தோற்றித் தங்கப் பதக்கங்களையும் வெள்ளிப் பதக்கங்களையும் வென்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் பல நிலையங்களிலும் இக்கற்கை நெறியில் கல்விபயிலும் அனைத்து மாணவர்களுக்குமான பரீட்சை யாழ். நக்கா வீதியில் அமைந்துள்ள ஓவியக் கூடத்தில் கடந்த 6ஆம் திகதி நடைபெற்றது. அயர்லாந்து நாட்டிலிருந்து வருகைதந்த இக்கற்கை நெறிக்குப் பொறுப்பான திரு. மத்தியு அவர்கள் இப்பரீட்சையை நடாத்தினார். 250வரையான பரீட்சார்த்திகள் இப்பரீட்சையில் தோற்றியிருந்த நிலையில் திருமறைக்கலாமன்றத்தில் பயிலும் 38 மணவர்களில் 17பேர் தங்கப்பதக்கங்களையும் 11பேர் வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுக்கொண்டனர்.

# பசுமைப்புரட்சித் திட்டத்தின் கீழ் ஒரு கோடி மரநடுகை



பசுமைப்புரட்சி திட்டத்தின் கீழ் ஒரு கோடி மரநடுகை நிகழ்வு எலைன்ஸ் பினான்ஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இலங்கையின் பல பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

இச்செயற்பாட்டின் ஓர் அங்கமாக நிறுவனப் பணிப்பாளர் றொமைடிஸ் சில்வா அவர்களின் ஒழுங்குபடுத்தலில் முழங்காவில் பங்குத்தந்தை அருட்தந்தை எமில் போல் அடிகளின் தலைமையில் கடந்த 05ஆம் திகதி முழங்காவில் இரணைமாநகர் புனித செபமாலை அன்னை ஆலய வளாகத்தில் 500 மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டதுடன் இந் நிகழ்வில் பங்குபற்றிய அனைவருக்கும் பலாக் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

# கார்மேல் முன்பள்ளி மாணவர்களின் மாதிரிச் சந்தை



யாழ். கார்மேல் முன்பள்ளி சிறார்களால் முன்னெடுக்கப்பட்ட சந்தை நிகழ்வு கடந்த 04ஆம் திகதி யாழ். பொஸ்கோ வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. முன்பள்ளி அதிபர் அருட்சகோதரி மரிய நிதர்சனா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளர் அருட்தந்தை எயின்சிலி றொஷான் அடிகள் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் றோ.க வித்தியாலய அதிபர் அருட்சகோதரி மரிய வசந்தி அவர்களும், கார்மேல் கன்னியர்மட உதவிப் பொறுப்பாளர் மாறி புளோரன்ஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இச்சந்தை நிகழ்வில் 250 வரையான சிறார்கள் கலந்து கொண்டார்கள்.

# குருநகர் வேளாங்கண்ணி ஆலயத் திருவிழா



யாழ். குருநகர் புனித வேளாங்கண்ணிமாதா ஆலய வருடாந்தத் திருவிழா உதவிப்பங்குத்தந்தை அருட்தந்தை தயதீபன் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 03ஆம் திகதி நடைபெற்றது.

திருநாள் திருப்பலியை அருட்தந்தை ஜீவாபோல் அடிகளும் நற்கருணைப் பெருவிழாத் திருப்பலியை அருட்தந்தை றெஜி ராஜேஸ்வரன் அடிகளும் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தனர். திருவிழாத் திருப்பலி நிறைவில் அன்னையின் திருச்சொரூபப் பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெற்றன.

# நாரந்தனை மறைக்கல்வி மாணவர்களின் களஅனுபவப் பயணம்



நாரந்தனைப் பங்கில் மறைக்கல்வி மாணவர்களினால் முன்னெடுக்கப்பட்ட கள அனுபவ சுற்றுலா நிகழ்வு கடந்த 07ஆம் திகதி நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை அஜந்தன் அடிகளின் வழிநடத்தலில் மறைக்கல்வி ஆசிரியர்கள் மாணவர்கள் என 65 வரையானவர்கள் கலந்து மேற்கொண்ட இக்கள அனுபவப் பயணத்தில் பொலனறுவை, அனுராதபுரம், சிகிரியா ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள முக்கியமான இடங்களைத் தரிசித்தார்கள்.

# அருட்சகோதரி மேரி அன்ரனிற்றா காலமானார்



போர்டோவின் யாழ் மாகாணத் திருக்குடும்பகன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மேரி அன்ரனிற்றா பஸ்ரியாம்பிள்ளை அவர்கள் கடந்த 07ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் 1960ஆம் ஆண்டு முதலாவது துறவற வார்த்தைப்பாட்டை நிறைவேற்றி 63 ஆண்டுகள் துறவற வாழ்வில் நிலைத்திருந்து பல இடங்களிலும் பணியாற்றி உள்ளார்.


# ஓராண்டு நிறைவில் மண்டைதீவு மரியாயின் சேனை



மண்டைதீவு புனித இராயப்பர் ஆலய மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்ட முதலாம் வருட நிறைவுநாள் கடந்த 04ஆம் திகதி பங்குத்தந்தை அருட்தந்தை செல்வரட்ணம் அடிகளின் தலைமையில் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நினைவுகூரப்பட்டது.

திருப்பலியைத் தொடர்ந்து மரியாயின் சேனை அங்கத்தவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வும் விருந்துபசாரமும் நடைபெற்றது. இந்நிகழ்வில் இராயப்பர் ஆலய மரியாயின் சேனை உறுப்பினர்கள் 14 பேர் பங்குபற்றினர்.


# பெரியவிளானில் முதல் நன்மை விழா



பெரியவிளான் புனித அந்தோனியார் ஆலயத்தில் பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு கடந்த 27ஆம் திகதி பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரனி மேரியன் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது.

பங்குத்தந்தையுடன் உதவிப்பங்குத்தந்தை பிரியந்த அடிகளும் இணைந்து அருட்சாதனத் திருப்பலியை ஒப்புக்கொடுத்துச் சிறார்களுக்கு முதல்நன்மை அருட்சாதனம் வழங்கிவைத்தனர்.

# குளமங்கால் முதல்நன்மை மாணவர்களுக்கான பயிற்சிப்பாசறை



குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தைச் சேர்ந்த முதல்நன்மை அருட்சாதனம் பெறவுள்ள சிறார்களுக்கான பாசறை நிகழ்வும் கள அனுபவச் சுற்றுலாவும் பங்குத்தந்தை அருட்தந்தை பாஸ்கரன் அடிகளின் தலைமையில் கடந்த 06ஆம் திகதி நடைபெற்றது. 26 சிறார்கள் தும்பளை புனித லூர்து அன்னை கெபிக்குப் பயணம் மேற்கொண்டு, நடைபெற்ற கருத்துரைகள், குழுச்செயற்பாடுகள், விளையாட்டுக்கள், கடற்பயணம், நற்கருணை வழிபாடு என்பவற்றில் கலந்துகொண்டார்கள்.

இந்நிகழ்வில் திரு போல் அவர்கள் வளவாளராகக் கலந்து நிகழ்வுகளை வழிப்படுத்தினார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2023ஆம் ஆண்டு யூன் மாதம் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.